உ

சிவமயம்

Newspaper in Ceylon

P. M. G. NO. H. A 69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது


மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.


புத். ருகூ] யாழ்ப்பாணம்—வியஞூ சித்திரைமீ கூஉ (1947 ஏப்பிரல் 22 செவ்வாய்க்கிழமை) [இல ரு


# சைவசமயம்

கடந்த 18-4-47 இல், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் நிகழ்ந்த அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் சிவக் கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களது

## தலைமைப் பேருரை

### சைவம்—உணவு I

சைவம் என்ற சொல்லின் பொருளினையும் அது வழங்குமாற்றையும் விசாரிக்குமிடத்துப் பல உண்மைகள் கிடைக்கின்றன. முதலில் புலாலுண்ணாது தூய உணவே உட்கொள்ளும் நிலை சைவம் எனப் பரந்து வழங்கப்படுகின்றது இது சைவரல்லாத பிறருள்ளிட்டு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உலக வழக்காகும். இதன் அடிப்படையாவது சைவம் என்ற கட்டடம் சீவகாருண்ணியம் என்ற அடிநிலையின்மேற் கட்டப்பட்டுள்ளது என்பதாம், நாங்கள் சைவர். சைவச் சாப்பாடு என்றவழக்குக்கள் காண்க.

இனிச் சைவம் என்பது இதனோடு நின்றுவிடுமோ? நின்றுவிடாது. அவ்வாறு நின்றுவிடின் அது சாப்பாட்டுச் சைவம் என்றொழியும். இது சைவ ஒழுக்கத்தின் இன்றியமையாத தொடக்க நிலையேயன்றி, முடிந்த நிலையாகாது. சிலர் கண்ணப்பர் அதிபத்தர் முதலிய பெரியோர் சரிதங்களைக் காட்டிப் புலாலுண்ணுமை சைவத்திற் கின்றியமையாத தொன்றன்று; புலாலுண்ணலும் சைவத்திற் கூடும் என்று வாதிடுவர்; அவை வேறுநிலை அவை உலகிறந்த நிலைகளாதலின் ஈண்டைக்கு எடுத்துக் காட்டலாகாவென்று விடுக்க.

### சைவம்—சமயம் II

இனி, சைவம், வைணவம், சுமார்த்தம், பௌத்தம் முதலாகச் சமய நிலைகள் வகுக்கப்படுதலின் அவற்றுள் ஒருசமயம் சைவம் என்பது மற்றொரு வழக்கு ஓரளவில் அஃதுண்மையேயாயினும ஏனையனபோலச் சைவம் ஒரு சமயம் என்பது சைவத்தின் முழுமை நிலையினைக்காட்டாது.

சமயம் என்ற சொல் நன்றாகச் செய்யப்பட்டது எனும் பொருள்படும் என்பர், மனிதர்க்குச் சமய உணர்ச்சி—சமய ஒழுக்கம்—வேண்டுமா? என்றால், இந்நாளில் அதுவேண்டப்படுவதின்று; அது மக்களைப் பேதப்படுத்தி நிலைகுலையச் செய்கின்றது, அதனை அறவே அகற்றினால் நாடு உய்யும் என்று கூவுவார் பலர். சமயவுணர்ச்சியே மனிதனை மனிதனுக்குவது என்பது ஆறிஞர் கருத்து. உடம்பளவாய் ஒழிந்த வாழ்க்கையே வாழ்ந்த மனிதனை உடம்புக்குள் உயிர் என்பது ஒரு பொருள் வேறாக உண்டு. அதைப்பற்றி ஆய்ந்து அதன் நல்வழியை நாடி நடப்பதே மக்களுக்கு உயர்ந்த கடமை என்று காட்டுவது சமய உணர்ச்சியாகும். உடம்பு வாழ்வே போதும், உயிர் வாழ்வு வேண்டாம் என்று கொள்ளும் மாக்கள் தாம் சமயஉணர்வும் வாழ்க்கையும் வேண்டுவதின்று என்பர், இவ்வாறு வரும் சமயங்கள் மக்களின் அறிவு முதலிய பக்குவ பேதங்கள்பற்றிப் பலதிறப்படுவன. "சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து" என்றார் தாயுமானார். "சமய கோடிகள்" என்றபடி சமயங்கள் அளப்பில்லாதன. அவை அத்தனையும் வேண்டப்படுவனவே. ஏன்? மக்களின் பக்குவ பேதங்களும் அளவில்லாதனவாதலின். ஒரு பள்ளிக்கூடத்திற் பல வகுப்புக்கள் இருத்தல் போலச் சமயங்களும் பலவாம். இவற்றின் படிமுறையினைக் கண்டாற்சமயப் போராட்டம் நிகழாது. இனி இச்சமயங்களுக்கெல்லாம் தலையாய் நிற்பதுசைவசமயம். "சைவசமயமே சமயம்" என்றார் பெரியோர். இது தன்னபிமானம்பற்றி எழுந்ததன்று. சமயத்தினை ஆராய்தல் வேண்டுமாயின் அவ்வாராய்ச்சி அதன் அளவை நூல்களானும் அளவைகளால் நிறுவிக் காட்டப்படும் உண்மைகளானும் அவற்றாற் பெறுவிக்கப்படும் கடவுளிலக்கணத்தானும், உயர்ந்தநிலை பெறுதற்குவிதிக்கும் சாதனங்களானுதான் முற்றுப்பெறும். இவ்வாற்றாலேலசைவ சமயம் ஏனைச் சமயங்களுள்ளே தலைசிறந்ததென்பது நாட்டப்படும். இவ்வுண்மை திருவருளாலும் குருவருளாலுமே உயிர்களின் பக்குவ நிலைக்கேற்பப் பெறப்படும்.

செய்வினையுஞ் செய்வானு
மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையா னுன்காகும் [டே
விதித்தபொருளெனக்கொண்
"இவ் வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லை"யென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே யுணர்ந்திருந்தார்"

(சாக்கியநாயனார் புராணம் 5)

என்று வரும் திருவாக்குக் காண்க. இது சைவத்தின் சமயநிலை.

### சைவம்—சமயாதீதம் III

ஆயின் சைவம் இதனுடன் அடங்கிநிற்குமோ எனின், நில்லாது. மேற்சமயங் கடந்த மோனசமாசம் வகுத்த நீ என்ற தாயுமானார் வாக்கு ஈண்டுக் கருதற்பாலது; சைவசமயமே சமயம் என்ற பெரியார் அதன்பின் "சமயாதீதப் பழம்பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்து" என்றார். எனவே சைவம் என்பது சாப்பாட்டுச் சைவத்துடனில்லாது; சமயச் சைவத்துடனும் நில்லாது, சமயங்கடந்த நிலைகொண்டது சைவம் என்பது மூன்றுவதாகக் காணவேண்டிய பொருள். எந்நிலையினின்றாலு மெக்கோலங் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே துன்னியவேடந் தன்னைத் துறிவாமதே தூயசிவந் தன்னை மிகு மன்பினான் மறவாமை தலை நிற்பார் (சாக்-புரா—6) என்பது இந்நிலையினை விளக்குதல் காண்க.


(தொடர்ச்சி 4-ம் பக்கம்)


# பெயர்கள் எங்கே?

## இடாப்பில் 14.000 பேர் இல்லையாம!

வடமாகாணத்தில் பாராளுமன்றத் தொகுதிக்கான வாக்காளர் இடாப்பு வெளிவந்துவிட்டது. இந்த இடாப்பில் தம் பெயர்களைக் காணுவிட்டால், வாக்காளராயுள்ளார் அரசாங்கத்தார்க்குக் குறித்த ஓர் கால வெல்லைக்குள் அறிவித்துத் தம்பெயர்களைச் சேர்க்கவேண்டும் என்பது ஒழுங்கு. ஆனால் பொதுஜனங்கள் இவ்விஷயத்திற் சிரமப்படாமலிருப்பதற்காக, அடுத்த தேர்தலில் அபேட்சகராக வர இருப்பவர்கள் இக்கைங்கரியத்தைச் செய்யத் தாமே முன்வந்துவிட்டனர்.

இந்த அபேட்சகர்களின் பிரதிநிதிகள், தத்தமக்குரிய தொகுதிகளில் சென்று, யார்யாருடைய பெயர்கள் குறித்த இடாப்பிற் சேர்க்கப்படவில்லை என்பதை விசாரித்து அறிந்து, அப்படிச் சேர்க்கப்படாதவர்களின் பெயர்களை அதிற்சேர்ப்பிக்க முயற்சி செய்துவருகிறார்கள். யாழ்ப்பாணத் தொகுதியில் மாத்திரம் 14,000 பெயர்களைக் காணவில்லையாம்.

காங்கேசன்துறைத் தொகுதியில் 7292 பெயர்கள் காணப்படவில்லை. வட்டுக்கோட்டைத் தொகுதியில் 5014 பெயர்களும், ஊர்காவற்றுறையில் 2273 பெயர்களும், கோப்பாய்த் தொகுதியில் 1,573 பெயர்களும், சாவகச்சேரித் தொகுதியில் 215 பெயர்களும், பருத்தித்துறைத் தொகுதியில் 4 பெயர்களும் புதிதாகச் சேர்க்கப்படவேண்டியனவாம்.

# இலங்கையிற் கப்பல் தொழில்

## நிர்மாணிக்க யோசனை

இலங்கையிலே ஓர் பெரிய கப்பல் தொழிலை நிர்மாணிக்க, இலங்கை இந்தியா என்னும் இருநாடுகளிலுமுள்ள சில பிரமுகர்கள் முயற்சி செய்கிறார்கள். இதற்கென ஓர் சமுதாயம் நிறுவப்படும் என்றும், அதிற் பெரும்பான்மையினர் இலங்கையராகவே இருப்பர்என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விஷயமாகப் பிரபல இந்திய முதலாளிகளான சேர். பஸல் இப்ராகிம் றகீம்துல்லா, ஸ்ரீ டின்ஷா என்னும் இருவரும் இப்போது இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். சேர். ஹோமி மேத்தா என்ற இன்னோர் பிரபல முதலாளியும் இதிற் சேருவாராம்.

இவ்விஷயமாக, கைத்தொழில் மந்திரியான மிஸ்ரர் ராஜா ஹீவாவித்தாரனை, இதிற் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் கொண்டுள்ள ஓர்மகாநாட்டைச் சென்ற வெள்ளிக்கிழமை கூட்டிக் கலந்தாலோசித்தார். அம்மகாநாட்டில் எவ்விதமானமுடிவு செய்யப்பட்டது என்பது இன்னும் வெளியிடப்படவில்லை.

# சுயராஜ்யம்!

## இலங்கை இந்தியக் காங்கிரஸ் கண்டனம்

"இலங்கை ஓர் சாம்ராஜ்யநாடாகக் கப்படல் வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் இந்துசமுத்திரத்தில் ஆதிக்கம்செலுத்த கடற்படை, விமானப்படைத் தளங்கள் இங்கிலாந்துக்கு இலங்கையிற் கிடைக்குமென்றும் "சுதந்தரப்பாதை" என்னும ஓர் புத்தகத்தில் மிஸ்ரர் டி. எஸ். சேனநாயக்கா குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய இந்தக் கூற்றைப் படித்த பிறகு இலங்கை பரிபூரண சுதந்திரமடைவது எப்பொழுதென்று அவரை நான் கேட்க விரும்புகிறேன்".

என்று இவ்வாறு சென்ற வெள்ளிக்கிழமை நாவலப்பிற்றியாவில் நிகழ்ந்த இலங்கை இந்தியக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீ சௌமிய மூர்த்தித் தொண்டைமான் தம் தலைமைப்பேருரையிற் குறிப்பிட்டார். இம்மகாநாட்டில் ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் கலந்துகொண்டனர். காங்கிரஸ் நிகழ்ச்த "சுதந்திர நகரை" அரசாங்கசபை யங்கத்தவரும், நகரசபை அங்கத்தவருமான மிஸ்ரர் ஆர். ஈ. ஜெயத்திலகா திறந்து வைத்தார்.

பின்னர் இலங்கையில் உள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியான ஸ்ரீஜா....த்எம். எஸ். ஆனே தேசியக்கொடியை ஆரோகணித்து மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்.

ஸ்ரீசௌமிய மூர்த்தி தொண்டைமான் தமது தலைமைப் பேருரையில் மிஸ்ரர் சேனநாயக்காவின் வழவழாக் கொள்கையைக் கண்டித்து, இலங்கைவாழ் இந்திய மக்கள், இந்நாட்டின் சுதந்திர விஷயத்தில் எவர்க்கும் இளைத்தவரல்லர் என்று, இதுவரை இலங்கை-இந்தியர் பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்படாமல், ஏதாவது காரணங்களைக் காட்டிக் கடத்தப்படுதற்கு வருத்தம் தெரிவித்தார்.

சென்னையில் தொழில் மந்திரியாயிருந்த ஸ்ரீ வி. வி. கிரி இம்மகாநாட்டில் ஓர் சொற்பொழிவு செய்தார். அகில ஆசியாவிலும் தோன்றியுள்ள புதிய சுதந்திர உணர்ச்சியையும் அதனைத் தழுவி எதிர்கால இலங்கை—இந்திய உறவு அமையவேண்டிய அவசியத்தையும் அவர் எடுத்துக் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—

"உலகம் மிகவும் உத்வேகமாக சமதர்ம நோக்கிற் போய்க்கொண்டிருக்கிறது. ஜாதிமத நிறவேற்றுமையின்றிச் சமதத்துவ ஜனநாயக அதிகாரத்தில், சமதர்ம சமுதாயம்-அதாவது எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் இனமாக-உலகெங்கும் ஸ்தாபிதமாகவேண்டுமென்று நாம் எல்லாரும் விரும்புகிறோம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
சித்திரைமீ கூ௨ செவ்வாய்க்கிழமை


## அகில இலங்கைச் சைவ மகாநாடு

முன்னர்த் தெரிவித்த பிரகாரம், அகில இலங்கைச் சைவ மகாநாடு, அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபையின் ஆதரவில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்வித்தியாசாலை மண்டபத்தில், சென்ற வெள்ளி, சனி, ஞாயிறு (18, 19, 20-4-47) ஆகிய மூன்று தினங்களிலும் கூடி நடைபெற்றது. குறித்த மகாநாட்டு அதிகாரிகள் வெளியிட்ட விஞ்ஞாபனத்தைக் கொண்டு "ஒரு அகில இலங்கைச் சைவ மகாநாடு" என்பதுமாத்திரம் அறியத்தக்கதாகவிருக்கின்றதேயன்றி, இது எத்தனையாம் ஆண்டுக் கூடிய மகாநாடு என்பது அறியத்தக்கதாகவில்லை.

இந்த ஆண்டு மகாநாட்டிற் பங்குபற்றும் வண்ணம் தென்னிந்தியாவிலிருந்து அழைக்கப்பெற்ற கோயமுத்தூர் "சிவக்கவிமணி" திரு. C. K சுப்பிரமணிய முதலியார், ராவ்பகதூர், திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் என்னும் இருபெரியாரும், இம்மகாநாட்டில் மாறிமாறித் தலைமை வகித்தும், பிரசாரகர்களாகியும் அரிய பெரிய விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்த பிரசாரணங்களைச் செய்துள்ளனர்; இப்பெரியாரிருவரும் செய்த சைவசமயத் தொடர்பான பிரசங்கங்கள் கேட்டா ருள்ளத்தைப் பிணிக்கும் இயல்பினவாய்க் கற்றூர் கல்லார் என்னும் இருபாலாரும் இலகுவில் விளங்கிக்கொள்ளத் தக்கனவாய்ப்புலப்பட்டன. அடியார் வணக்கம் தேவார திருவாசகம் முதலாம் அருட்பாக்களிற் காணக் கிடக்குந் தத்துவப் பொருள்கள், சைவசமயத்தவர் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கம், செய்யவேண்டிய கடமை, சமயத்தைப் பரிபாலிக்கவேண்டிய முறை, சைவக் கல்விமுறை முதலாம் பல அரிய விஷயங்கள் இப்பெரியா ரிருவரும் செய்த அரியபிரசங்கங்களில்ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டன. சுருங்கச் சொல்லுகில், இப்பெரியார்கள் இயல்பாகவே கொண்டுள்ள சமய அபிமானம், தமிழ்மொழியபிமானம், சைவ அநுட்டானம சிறந்த நூலாராய்ச்சி பேச்சு வன்மை, சிவதொண்டிற்கொண்ட உறைப்பு முதலாந் திறமைகளே, இவர்களிருவருஞ் செய்யும் பிரசாரங்களை இங்குள்ளார் விரும்பி, இனிது கேட்டற்கு ஏதுக்களாகவுள்ளனவெனலாம் இம்மகாநாட்டிற் பங்குபற்றிப் பிரசங்கங்கள் செய்த ஏனைய அறிஞர்களின் பிரசங்கங்களும் அவரவர்கொண்ட திறமைக்கும் அபிமானத்திற்கும் அநுஷ்டானத்திற்குந் தகச் சிறந்தனவென்பதற்கையமில்லை. "அத்துவிதம்' என்ற விஷயமாகத் திரு மு. ஞானப்பிரகாச மவர்கள் செய்த பிரசங்கம் நுட்பமானது;

மேற்படி மகாநாட்டிற் சில பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன; ஆனற் பிரேரணைகளை நிறைவேற்றி விடுவதனல் மாத்திரம் பயனுண்டாகுமென மகாநாட்டினர் நம்பியிருக்கவொண்ணுதென்கின்றேம்; அந்தப் பிரேரணைகளில் எடுத்த நோக்கங்கள்கைகூடும்வரையும் இடையருது ஊக்கத்தோடு உழைத்தல்வேண்டும்; அரசியல் விவகாரம் யாதும் பேசப்படுவதில்லை என்ற நியதியோடு கூடிய இம் மகாநாட்டில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் அரசியல் விவகாரம், பிரசாரகரை யறியாமலே தோன்றி உடனே மறைந்துவிட்டதெனலாம். இக்காலத்திலே அரசியல் விவகாரங்கள் மேலும், போலிச் சுவதந்திரத்தின்மீதும் கொண்ட எல்லைகடந்த அபிமானமே இச் சைவமக்களிடத்துப் பண்டுதொட்டிருந்த சமயாபிமானத்தையும் ஒழுக்கத்தையும் தெய்வநம்பிக்கை பக்தி சிந்தனையென்னுமிவைகளையும் கெடுத்து நம்மவரை எம்மதமுஞ் சம்மதமெனச் சொல்லவும், சமயத்துரோகமான கருமங்களைச்செய்யவுந் தூண்டிவிட்டன; சைவங் குன்றும், பௌத்தம் விருத்தியாகும், செந்தமிழ் தேயும், சிங்களமொழி யோங்கும் என்ற இப்படியான எண்ணங்களும், இவைகாரணமாக, உண்டாகும் அச்சமும் வீண் பிராந்தியின் பாற்படும்; சைவத் தனிச்சமயமும், செந்தமிழ் மொழியும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளின் ஆக்ஞையினல் நின்று நிலவுவன என்ற திட நம்பிக்கை சைவ நன்மக்கள் எவர்மாட்டும் இருத்தல்வேண்டும். சைவ மக்களாயுள்ள நாங்கள் நம்முடைய சமயத்தையும் தமிழ் மொழியையும் பேணி வளர்க்க வகையறியாது, மற்றைச்சமயத்தவர்களை, மற்றை மொழியினரை, அவர்கள் எங்கள் சமயம் பாஷைகளுக்கு இடர் விளைப்பார்கள், ஆனதினல் அவர்களை அப்படிச்செய்யவொட்டாது தடுத்தல் வேண்டுமென்று அரசினரையும் அதிகாரிகளையும் வேண்டி நிற்றல், ஒருவன் தன்வளவின் வேலியை நன்கு அடைத்துப் பாதுகாத்தலின்றிச் சிதைய விட்டுவிட்டு, "அயலவர்களுடைய மாடு ஆடுகள் என் வீட்டுப் பயிரை வந்து அழிக்கின்றன;ஆனதினல்அந்த ஆடுமாடுகளைக் கட்டி வைக்கும்படி அந்த அயலவர்களுக்குக் கட்டளை செய்யுங்கள்" எனத் தலைமைக்காரனிடம் போய் முறையிடுதலை நிகர்க்கும். அந்தக் காலத்திலே ஒரு குலச்சிறையாரும், ஒரு மங்கையர்க்கரசியாரும் தம் பாண்டிநாடு முழுவதிலும் தடிக்கப் பரந்த சமண மதத்தை அறவேயகற்றிச் சைவத்தை நிலைநாட்டுதற்கு மூலகாரணராயிருந்தனர்; இடைக்காலத்திலே சங்கராச்சாரியரும் இராமானுசரும் சமணசமயத்தை ஒருங்கு அகலச் செய்து முறையே சைவசமயத்தையும்விட்டுணுமார்க்கத்தையும் தனித்தனி நிலைநாட்டினர்; பிற்காலத்திலே ஒரேயொரு ஆறுமுகநாவலர் தாம் இங்கே யுதித்து, இந்நாட்டிலே தடித்துப் பரக்க முயன்ற கிறீஸ்து மார்க்கத்தை யொதுக்கிச் சைவத்தை யோங்கச் செய்தனரெனலாம். சைவ சமயமுஞ் செந்தமிழும் குன்றத் தலைப்படுங் காலங்களி லெல்லாம், சிவனருளாலும் செந்தமிழ்த் தெய்வமாகிய முருகனருளாலும் ஒவ்வோர் அவதார புருஷர் தோன்றி அவற்றை முறையே விருத்தி செய்து வைப்ப ரென்ற திடநம்பிக்கை சைவத் தமிழ் மக்களெவரிடத்தும் இருத்தல்வேண்டும். சைவசமயத்தவருள் ஐந்துபேர் உண்மையான சைவ நெறியிலே சிறிதுந் திறம்பாது ஒழுகிவருவரேல், பத்துத் தமிழர் தமிழபிமானத்தோடு தமிழ்ப் பரம்பரையைப் பாதுகாக்கவேண்டுமென்று மனப்பூர்வமாக உழைப்பரேல், சைவத்திற்காயினும் தமிழுக்காயினும் எவ்வகையான குறைவும் நேராவாம். ஆனல் அங்ஙனம் உழைப்பவர் இறைவனுடைய திருவருளின் துணையைக் கொண்டு உழைத்தல்வேண்டும்.

இம் மகாநாட்டு விஷயமாக இன்னஞ் செய்யவேண்டிய விருத்திகளுளவேல், சமயம் வாய்ப்[illegible]ம்.

உலக அரசியல் அரங்கம்

# அமெரிக்க-ருஷிய பிணக்கு

# நீங்கும் அறிகுறி இல்லை

### பலஸ்தீனம்

பலஸ்தீனப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. இப்பிரச்னை இன்னுஞ் சில தினங்களில் ஐக்கியதேசஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு விடப்படஇருக்கிறது. அரபுப் பிரதிநிதிகளும் யூதரும், இந்த ஸ்தாபனத்தில் தத்தம் கட்சிக்கு ஆதாவு தேடப் புறப்பட்டு விட்டனர். இந்தியாவும் இந்த ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கிறது. இந்தியாவின் ஆதாவைப் பெறுதற்கு அராபிய நாடுகள் ஆவலாக இருக்கின்றன. இதற்கிடையில், யூதப் பயங்கா இயக்கத்தைச் சேர்ந்த டோவ் குறானர் என்பவர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டுவிட்டபடியால் யூதர் ஆத்திரத்துடன் இருக்கின்றனர். "யூதப் பிரச்சினை இனிச் சமாதானவழியால் தீர்க்கப்படமாட்டாது. பிரிட்டிஷார் பலாதகாரத்தில் இறங்கிவிட்டனர். நாமும் இனிப் பலாத்காரத்தில் இறங்கி உயிருக்குயிர் பழிவாங்கி எம் லட்சியத்தை அடைவோம்" என்று பலஸ்தீனப் பயங்கா இயக்கத்து யூதர் கூறுகின்றனர் இப்போது பலஸ்தீனத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. பிரிட்டிஷார் மீது வெடிகுண்டுகள் வீசுவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

○

### பர்மா

பர்மாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கும் அரசியல் நிர்மாண சபைக்கான தேர்தல்கள் முடிந்து விட்டன. 100க்கு 80 விகிதமான ஸ்தானங்களை ஆங்ஸேன்கட்சி கைப்பற்றிவிட்டது. இனி அரசியல் நிர்மாணவேலை துரிதமாக நடைபெறும் என்றும், பிரிட்டிஷார் விரும்பினலுஞ் சரி விரும்பாவிட்டாலுஞ்சரி இன்னும் ஒரு ஆண்டுக்குள் பர்மா பூரண சுதந்திரமடைந்துவிடும் என்று ஆங்ஸேன் ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

○

### மொஸ்கோ மகாநாடு

மொஸ்கோவில் பலநாட்களாக நடைபெற்றுவரும் வல்லரசுகளின் அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு இதுவரை உருப்படியான கருமம் எதனையும் சாதிக்காது, பரஸ்பரம் வசைபுராணம்பாடுவதிலேயே காலம் போக்கி வருகிறது ஜெர்மனி விஷயமாக என்னவிதமான கொள்கையை இனிக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் விஷயத்தில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒருவித அபிப்பிராயமும ருஷியா இன்னொர்விதமான அபிப்பிராயமும் கொண்டிருக்கின்றன. இந்த இரு கோஷ்டிகளுக்குமிடையில் ஒற்றுமை ஏற்படும் என்று சொல்வதற்கில்லை ஆகவே கூடிய சீக்கிரத்தில் இம மகாநாடு கலைக்கப்படலாம் என்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன.

○

### ஹென்றி வாலேஸ்

ஜனதிபதி றூஸ்வெல்ட் காலத்தில் அவர்க்கு உதவி ஜனதிபதியாக இருந்த மிஸ்டர் ஹென்றிவாலேஸ் இன்று அமெரிக்காவின் அயல்நாட்டுக்கொள்கையைக் கண்டித்து உலகெங்கும் பிரசாரம் புரிந்துவருகிறார். இன்று அமெரிக்கா சோவியத் ருஷியாவுக்கு விரோதமாகக் கைக்கொண்டுவரும் கொள்கைகள் உலக சமாதானத்துக்கே பங்கம் விளைக்கும் என்றும், கிறீஸ் துருக்கி என்னும் இருநாடுகளுக்கும் பணஉதவிசெய்ய அமெரிக்க ஜனதிபதி ட்ரூமன் நிச்சயித்திருப்பது உலக ஜனநாயகத்துக்கே ஆபத்து விளைக்கக்கூடியதென்றும், உலக சமாதானம் நீடித்து இருக்க வேண்டுமானல் சகல வல்லரசுகளும் சோவியத் ருஷியாவுடன் சமாதானமாக இருக்கவேணடும் என்றும் பிரசாரம் புரிந்துவருகிறார். மிஸ்டர் வாலேஸ் இங்கிலாந்தில இருந்து இப்போது நோர்வே ஸ்வீடன் முதலாம் தேசங்களுக்கு விஜயம் செய்கிறார். இவரின் நடைவடிக்கைகள் அமெரிக்க அரசாங்கத்துக்கு வெறுப்பைக் கொடுத்திருக்கின்றன. இவர் தேசத்துரோகி, இவர்மீது இராஜத்து ராக நடைவடிக்கைஎடுக்கப்படல்வேண்டும் என்று அமெரிக்காவிற் சிலர் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனல் மிஸ்டர் வாலேஸ் உண்மையான ஜனநாயகவாதி என்றும் அவர் கொள்கைகளைத் தாம் மனப்பூர்வமாக ஆதரிப்பதாகவும் பிரிட்டிஷ பாராளுமன்றத்தைச்சேர்ந்த 100க்கு மேற்பட்டவர்கள் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

○

### பிரான்ஸின் கெடுபிடி

பிரான்ஸ் தேசத்துக்குச் சனிதிசை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. வியற்நாம்சுதந்திரப்போராட்டம்இன்னும் ஒழிந்தபாடில்லை.பிரான்சிய ஏகாதிபத்தியவாதிகள் அச்சுதந்திரப் போராட்டத்தை நசுக்க எவ்வளவோ முயற்சி செய்தும் அது பிரதிகூலமடைந்து வருகிறது. இப்போது பிரான்சின் இன்னோர் அடிமை நாடான மடகஸ்காரிலும் சுதந்திரக்கிளர்ச்சி ஆரம்பமாகிவிட்டது. அது ஒழிக்கப்பட்டுவிட்டது என்று பிரான்சியர் கூறி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# சமரசம் ஏற்படுமா?

## கல்கத்தாப் பத்திரிகையின் கூற்று

### இராஜப்பிரதிநிதி முயற்சி

அதிகாரத்தை இந்தியர்கைக்கு மாற்ற முன், நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் இதுவே இராஜப் பிரதிநிதி மவுன்ற்பேற்றன் பிரபுவின் முதல்வேலையாக இருக்கிறது. இதன்பொருட்டு, அவர் மகாத்மாகாந்தி, ஜின்னு என்னும் இருவரும் ஒருங்கு சேர்ந்து ஓர் சமாதான வேண்டுகோளை விடுக்கும்படி செய்தார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நாட்டிற் சமாதானமாக இருக்கவேண்டும். பலாத்காரத்தில் ஈடுபடக்கூடாது என்று இந்த இரு பெரியார்களும் விடுத்துள்ள கூட்டறிக்கை இந்தியாவில் உள்ள சகல இடங்களிலும் பரப்பப்பட்டு வருகிறது. இந்தக் கூட்டறிக்கையினுல் பயன் கிடைத்திருக்கிறதா?

●

### அமைதி இல்லை

ஜின்னுவின் சமாதான வேண்டுகோளுக்கு முஸ்லிம் காடையர் இணங்கியதாகத் தெரியவில்லை. பாஞ்சாலத்தில் இன்னும் முஸ்லீம்களின் அட்டூழியங்கள் ஒழியவில்லை. எல்லைப்புறத்தில் அவர்கள் செய்துவரும் அக்கிரமம் நிற்கவில்லை. டேரா இஸ்மெயில்கான் என்னும் நகரத்திலே பாதிக்குமேல் நாசமாகிவிட்டது. வங்காளத்திலே, நவகாளியில் மீண்டும் வகுப்புக்கலகம் ஆரம்பமாகிவிட்டது என்று பிந்திக்கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. மகாத்மாகாந்தியின் கட்டளைக்கிணங்கி; ஹிந்துக்களும் ஏனையோரும் நடப்பதைப்போல, ஜின்னுவின் கட்டளைக்கிணங்கி முஸ்லிம்கள் நடப்பாரோ என்பது இதுவரை சந்தேகமாகவேயிருக்கிறது. எல்லைப்புறத்தில் முஸ்லிம் லீக்கின் சட்டமறுப்பியக்கம் (காங்கிரஸ் மந்திரசபையைக் கவிழ்க்கும் சூழ்ச்சி) நிறுத்தப்படவில்லையாயினும், அங்கே பலாத்காரத்தில் ஈடுபடாது சட்டமறுப்புச் செய்த லீக்கர்களைச் சிறையினின்றும் விடுதலை செய்ய எல்லைப்புறப் பிரதமர் டக்டர் கான்சாகிப் தீர்மானித்து இருக்கிறார். சென்றவாரம் டக்டர் கான்சாகிப், எல்லைப்புறத் தேசாதிபதி என்பவர்கள் இவ் விஷயமாக இராஜப்பிரதிநிதியுடன் கலந்தாலோசித்தனர்.

●

### சமஸ்தானங்கள் நிலை

அரசியல் நிர்மாணசபையில் இப்போது பங்கெடுக்க முடியாது என்று நிற்கும் சுதேச சமஸ்தானங்களுக்குப் பண்டிதர் நேரு தக்க சூடு ஒன்று கொடுத்துவிட்டார். அரசியல் நிர்மாணசபையிற் சேராது இருப்பவர்கள் எல்லாரும் இந்தியரின் சத்துராதிகள் என்று அவர் சென்றவாரம் குவாலியூரில் நிகழ்ந்த சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டிற் கூறியது மிகுந்த பரபரப்பை யுண்டாக்கிவிட்டது. இப்படியான கடும் பதங்களைப் பிரயோகிக்கலாமா என்றும் பலர் சடாவினர். வெட்டொன்று துண்டிரண்டாக இப்போது விஷயங்களைப் பேசவேண்டுமேயன்றி பேச்சொன்று செயலொன்ருக இருக்க முடியாது என்று பண்டிதர் கூறிவிட்டார். இதுவரை, குவாலியூர், கொச்சி, பரோடா, பிக்கானீர் உட்பட ஆக 10 சமஸ்தானங்கள் வரையே அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்திருந்தன ஆனுல் பண்டிதர் நேருவின் சென்றவாரப் பேச்சின்பின் 30 சமஸ்தானங்கள், நான்முந்தி, நீ முந்தி என்று அரசியல் நிர்மாணசபையிற் சேர முற்பட்டுவிட்டன. இந்தச் சமஸ்தானங்கள் கேவலம் பிரிட்டிஷாரின் கைப்பொம்மைகளாக இருந்துவந்தவை. பிரிட்டிஷார் நாட்டைவிட்டு அகன்றதும் தாங்கள் தனிராஜ்யங்களாக நின்று கருமம் ஆற்றலாம் என்று கனவு காண்கின்றன. இப்படிக் கனவுகாணும் சமஸ்தானங்களில் திருவாங்கூர், போபால் என்பனசிரேட்டமானவை. ஆனல் அவை காலத்தின் போக்கை உணர்ந்து கூடிய சீக்கிரம் இந்தியச் சமஷ்டியிற் சேருங்காலம் தூரத்தில் இல்லை.

●

### சமரசம் ஏற்படுமா?

இந்திய இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன் பிரபு ஆரம்பித்திருக்கும் சம்பாஷணைகளின் பயனுக முஸ்லிம்லீக், காங்கிரஸ் என்னும் இரு ஸ்தாபனங்கட்கு மிடையே கூடிய சீக்கிரத்தில் ஓர் சமரசம் ஏற்படக் கூடும்; அதற்கான உற்பாதங்கள் தோன்றியுள்ளன என்று கல்கத்தா அமிர்தபஜார்ப் பத்திரிகையின் டெல்கி நிருபர் தெரிவிக்கிருர். பிரிட்டிஷ் மந்திரசபைக் கோஷ்டி இந்தியாவுக்குவந்துவகுத்த அரசியற்றிட்டத்தை ஆதாரமாகக்கொண்டு முஸ்லிம் லீக் அரசியல் நிர்மாண சபையிற் பங்குபற்றும்; பீ. ஸீ. தொகுதிகளில், முஸ்லிம்லீக் சிறுபான்மையினர்க்குப் பாதுகாப்புக்கள் அளிக்க உத்தரவாதம் கொடுக்கும். எல்லாமாகாணங்களிலும் உடனே கூட்டுமந்திரசபை நிறுவப்படும் என்று இன்னேரன்ன தகவல்களை ஷை பத்திரிகை நிருபர் தெரிவிக்கிருர்.

●

### இந்தியா மந்திரி

இந்தியா மந்திரியாக இருந்த பெதிக் லாரன்ஸ் பிரபு பதவியினின்றும் விலகிவிட்டார். அவரிடத்துக்கு லிஸ்ரோவல் பிரபு நியமிக்கப்பட்டிருக்கிருர். இதுவரை இந்தியா விஷயமாகவுள்ள கொள்கையில் எவ்வித மாற்றமும் நிகழமாட்டாது என்று கூறப்படுகிறது.

# பெரிய நட்டம்!

## ஸ்ரீ நடராஜாவின் பிரிவு

இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஓர் அணிகலனுய், இலங்கையிலுள்ள நியாயவாதிகளில் தலைசிறந்தவராய், அறிவு ஆற்றல் என்பவற்றில் மேம்பட்டவராய் விளங்கிய ஸ்ரீ நடராசா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை அதிகாலை, கொழும்பி லுள்ள கமலாஸனம் என்னும் தமது இல்லத்திற்ருனே சடுதி மரணமடைந்தனர்; சடுதியாக ஏற்பட்டமாரடைப்பே அவர் அகால மரணத்துக்குக் காரணம்.

ஸ்ரீ நடராஜா தம் நியாயவாதத்தொழிலோடு மாத்திரம் நிற்கவில்லை. அரசாங்கத்தால் காலந்தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ள பல விசாரணைச் சபைகளில் அங்கத்துவம் வகித்து மகத்தான சேவைகள் புரிந்தார். கடைசியாக அவர் அங்கத்துவம் வகித்தது தேர்தற்றெகுதி நிர்ணய சபையிலாகும்.

கொழும்பு விவேகானந்தசபை முக்கிய அங்கத்தவர்களில் ஸ்ரீ நடராஜாவும் ஒருவர். சென்ற மார்ச்மாதம் அவர் சுப்பிறீம் கோட் நீதியரசராக நியமிக்கப்பட்டார். ஸ்ரீ நடராசா இறக்கும்போது வயசு 50 மாத்திரமே.

தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலத்தில், ஸ்ரீ நடராசா போன்றவர்களின் அகாலமரணம் தமிழ்ச் சமூகத்துக்குப் பெரும் நட்டம் என்று கூறினும் மிகையாகாது.

# கண்மூடித்தனம்!

## ஹிந்துக்களின் இப்போதைய நிலை?

எமது சைவசமயிகளின் நிலை இன்று என்ன? எம்மவருட் பலர் புறமதம் புகுகின்றனர். அண்மையில், இந்தியாவிலே சேலம் ஜில்லாவில் ஐந்து ஆறு கிராமத்தவர் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர் என்று அறிந்து மனம் வருந்துகிறேம். இதேபோல எமது நாட்டிலும் சிலகாலத்துக்கு முன் நெடுந்தீவிலும், அச்சுவேலியிலும் மதமாற்றம் செய்யப்பட்டதாக அறிந்தோம். நாம் கண்மூடியிருந்து பழங்கதை பேசுவதில் ஓர் மகிமையுமில்லை' என்று சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில நிகழ்ந்த அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் 8-வது நிறைவு விழாக் கூட்டத்து வரவேற்புரையில் ஷை மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவர் ஸ்ரீ அ அருளம்பலம் குறிப்பிட்டார்.

அகில இலங்கைச் சைவ மகாநாட்டின் இவ்வாண்டுத் தலைவர் கோயமுத்தூர் சிவக் கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களும், ருவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும் ஊர்வலமாக மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழ்மறை ஒதியபின், வரவேற்புரைத் தலைவர் ஸ்ரீ அ. அருளம்பலம் மகாநாட்டுக்குச் சமுகமளித்தவர்களை வரவேற்றுப் பின் வருமாறு பேசினுர்:

மகாநாடு என்பது உயரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிலைக்களமாகவுள்ள ஓர் கூட்டமாகும். ஆகையால் இப்படிப்பட்ட மகாநாடுகள் அவசியமே. அதுவும் சமயப்பற்றும் கடவுள்நம்பிக்கையும் குறைந்து, கண்டதேகாட்சி, உடலே ஆன்மா, உடலின்பமே பேரின்பம் என்னும் உலகாயதமதம் வளர்ந்து அணுக்குண்டின் ஆற்றலும் அதனை உபயோகிப்போது அக்கிரமமும் மிதத்துவரும் இந்நாளில், ஆதியும் அந்தமும் இல்லானும் அணுவுக்கணுவாய் உள்ளவனும், அண்டமோரணுவாம் பெருமைபடைத்தவனும், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும அப் பெற்றியனும், எல்லாம்வல்ல அருட்சோதியுமாகிய இறைவனை நெஞ்சால் நினைத்து வாயார வாழ்த்தி தலையார வணங்கி அவனதும் அவன் அடியார்களதும் பெருமைகளைக் கூறி அவன் எமக்குத் தந்த பேரின்ப நெறியாகிய சைவ சித்தாந்த மார்க்கத்தில் நின்று அவன் திருவடி சேர எம்மைத் தூண்டும் இதுபோன்ற மகாநாடுகள் சாலவும் வேண்டியனவே

எமது சைவசித்தாந்த சமயம் முப்பொருள் உண்மையையும், அத்துவித நுட்பத்தையும், சற்காரிய வாதத்தையும், சொரூப தடத்த இயலையும், சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நாற்பாதங்களையும் அறம் பொருள் இன்பம் வீடு ஆதியனவற்றினையும் அறிவுறுத்துகின்றது. இவை சைவ சமயத்தின் விசேடணங்கள். சுருக்கச் சொல்லின் முப்பொருள்களாவன பதி, பசு, பாசம் என்பனவாம். இவற்றின் உண்மையை வலியுறுத்துவதற்கு நூல்கள் "யாவையினுங்கருத்து பதி பசு பாசம் தெரித்தல்" என்றுர் உமாபதி சிவம், வேதாந்தம் "அது, நீ ஆகிருய்" (தத்வமஸி) என்கின்றது. சித்தாந்தம் அது நீ ஆகிருய் என்பதில் அது இறைவனென்றும், நீ, உயிர் என்றும். நீ இப்போது அது ஆகாமல் இருப்பதற்குத் தடையாயுள்ளது பாசமென்றுங் கூறி, பாசத்தை நீக்கினுல் இறைவனை அடையலாம் என்றும் காட்டி, முப்பொருள் உண்மையை விளக்குகின்றது. மேலும் ஆன்மாக்களைப் பாசத்தினின்றும் விடுதலைசெய்யும்பொருட்டு இறைவன் எமக்குத் தனுகரண புவன போகங்களைத் தந்து அருள்புரிகின்றுன் என்று சித்தாந்தம் சாற்றுகின்றது

அத்துவித நுட்பமாவது இறைவன் தனியாய் இருந்தும் சகல உயிர்களிலும் செறிந்து நின்று அவையுமாய் நிற்கும் அநந்ய நிலை ஆகும். இவ்வுண்மையை திருவாதவூரடிகள்" ஒன்று நீயல்லை யன்றியொன்றில்லை யாருன்னை அறியகிற்பாரே" என்றும், உமாபதிசிவம் "உடல் உயிர், கண் அருட்கண், அறிவொழிபோற் பிரிவரும் அத்துவிதம்' என்று உதாரணவகையாலும், தாயுமான சுவாமிகள், "பொய்கண்டார் காணுப்புனிதமெனுமத்துவித, மெய்கண்ட நாதனருள், மேவு நாளெந்நாளோ" என்றும்

"ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெஞ்ஞானத் தாணுவினேடத்து வித

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# செய்தித் திரட்டு

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையிலிருந்து 21,128,684 இறத்தல் தேயிலை பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாயிருக்கிறது.

*   *

ஜேர்மனியின் உணவின்பொருட்டு இங்கிலாந்தும் ஐக்கிய அமெரிக்காவும் ஆண்டுதோறும் 30 கோடி டாலர் செலவிடுகின்றன

*   *

சீனத்துக்கும் பிலிப்பைன் அரசாங்கத்துக்குமிடையே ஓர் நட்புடன்படிக்கை சென்ற வெள்ளிக்கிழமை நிறைவேறியது.

*   *

தலவாக்கோல்லைப் பகுதிக்கு ஸ்ரீ பீ. வேல்சாமி என்பவர் சமசமாஜக்கட்சியின் சார்பாக அடுத்த தேர்தலில் முன்னிற்பரென்று ஷை கட்சியின் அறிக்கை கூறுகிறது.

*   *

இலங்கை சமசமாஜக்கட்சி ஸ்தாபகர்களில் ஒருவரும், இப்போது அக்கட்சியினின்றும் பிரிந்திருப்பவருமான டக்டர் கோல்வின் ஆர். டி சில்வா. சென்ற வாரம் பம்பாயி லிருந்து சென்னைக்கு வந்தபோது, சென்னை யரசாங்கத்தாற் சிறையாக்கப்பட்டார். பக்கிங்ஹாம், கர்னட்டிக் நெசவுச் சாலையில் நிகழும் வேலைநிறுத்தத்தில் டக்டர் கோல்வின் சில்வாவும் பங்கெடுத்தார் என்று கருதப்படுகிறது.

*   *

அரிசியைப் பிரதான உணவாகக் கோண்டுள்ள 8 டேரிய தேசங்களின் மகாநாடு மே மாதம் 15-ந் தேதி திருவனந்தபுரத்தில் கூடும் என சர்வதேச உணவு விவசாயசபை அறிவிக்கிறது. மகாநாடு நான்கு வார காலம் கூடுமென அறியப்படுகிறது.

*   *

பாஞ்சாலப் போதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, அகில இந்திய ஹிந்து மகாசபைக் காரியதரிசியான ஸ்ரீ ஜுத். தேஷ்பாண்டே லாகூர் நீதிஸ்தலத்தில் 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

*   *

மலாய் நாட்டில் உள்ளசகல உத்தியோகத்தர்களதும் வேதனம்பற்றி ஓர் விசாரணை நடத்தக் குடியேற்ற நாட்டு மந்திரி நிர்ணயித்திருக்கிருர்; அந்தவிசாரணை இன்னும் சில தினங்களில் ஓரம்பமாகும்:

*   *

இந்தியாவின் ஐக்கியமாகாணத்தில் லஞ்சம் பெற்றனர் என்ற குற்றத்தின் பேரில் 74 அரசாங்கஉத்தியோகத்தர் இப்போது நீக்கப்பட்டிருக்கின்ருர்.கள்.

*   *

பலஸ்தீனத்தில் தெல்அவீவ் பொலிஸ் தானத்தைத் தகர்க்க முயற்சிசெய்த குற்றத்தின்பொருட்டு, டொவ்குறுனர் என்னும் யூதப் பயங்கர இயக்கத்தவன் சென்றவாரம தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டான்.

*   *   *

9 அங்கத்தவர்களைக்கொண்ட ஓர் இந்திய வர்த்தகத் தூதுக்கோஷ்டி இப்போது துருக்கிக்குச் சென்றிருக்கிறது. இந்தியாதுருக்கி என்னும் இருநாடுகளுக்குமிடையேயுள்ள வர்த்தகத் தொடர்பைப் பலப்படுத்தும் நோக்கமாகவே இத் தூதுக்கோஷ்டி துருக்கிக்குப்போயிருக்கிறது.

## காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நிகழும் சித்திரை மாதம் ௧௨ (25-4-47) வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் துவஷாரோகணம் நடைபெறும். அடுத்த 20உ (3-5-47) சனிக்கிழமை இரதோற்சவமும் உக உ ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

**சைவம் — எல்லாம் தன்னுள் அடங்கியது IV**

இனி, இவற்றின் மேலாய் நான் காவதாக மற்றொரு கருத்தினாற் பெறப்படும் சைவமும் உண்டு. அஃதாவது சைவம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய முழுமைநிலை கொண்டுதான் வேறொன்றினுமடங்காத நிலைபெற்றது என்பதாம். ஒரு ரூபாயினுள் ஒருசதம, 5 சதம், 10 சதம், 50 சதம் எல்லாம் அடங்கும். ரூபாய் இவை ஒன்றினுமடங்காதது; தலை, கை கால் முதலிய அவயவங்கள் உடல் என்ற முழுமையினுள் அடங்குவன. ஆனல் முழு உடல் அவற்றுளொன்றினு மடங்காதது என்பனபோலக் கண்டுகொள்க. புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனப் பகுக்கப்படும் எல்லாச் சமயங்களும் சைவத்தில் ஒவ்வோர் படிமுறையினுள் அடங்குவனவேயாம் என்பதை ஞானநூல்கள் வகுத்துக் காட்டுவன. "எல்லாஞ் சிவனென நின்றாய் போற்றி" முதலிய திருவாக்குக்கள் காண்க. ஆளுடைய பிள்ளையார் திருத்தெளிச் சேரியினை வணங்கிச் செல்லும் வழியில் புத்தர்கள் வந்து எதிர்த்துச் சமயவாதம் புரிந்து தோல்வியுற்று அவரது திருவடிகளில் வணங்கினர். "அன்று அவர்க்குக் காழியர்கோன் கருணை நோக்கமலர்தலினு லறிவின்மையகன்று நீங்கி"ச் சைவரானுர். அப்போது பிள்ளையார் எங்கு நின்றனவுஞ் சரிப்பனவும் சைவமேயாம்நிலைமை யவர்க்கருள் செய்தார்" (திருஞான—புராணம் 926) என்ற வரலாறு இங்குக் கருதற்பாலது. சாக்கியநாயனுர் துன்னியவேடந் தன்னைத் துறவாதே சைவத்திறத்தில் ஒழுகிய கருத்துமிது. "மெய்ம்மையும் பொய்ம்மையுமாயினுர்க்குச், சோதியுமாயிருளாயினுர்க்குத் துன்பமுமா யின்பமாயினுர்க்குப், பாதியுமாய் முற்றுமாயினுர்க்குப், பந்தமுமாய் வீடுமாயினுருக்கு" (திருப்பொற்—20) என வரும் மணிவாசகப்பெருமானுர் திருவாக்கு இக்கருத்தினை எடுத்துக் காட்டுவதாம்.

இந்நால்வகைச் சைவத் திறத்தின் பொருள்களையும் மனங்கொண்டாற் சைவத்தின் தனிப்பெருமை விளங்கும். அதுவேயுமன்றிச் சமயப்பிணக்குகளும ஒழியும். இனி இவ்வாறு வரும் சைவர்கள் உள்கொள்ளவேண்டிய இன்றியமையாத கருத்து ஒன்றுண்டு.

**சைவர் உட்கொள்ளும் கருத்து**

அது சைவ அளவை நூல்கள் யாவை என்பதாம். அவை வேத சிவாகமங்களும் சைவத்தெய்வத்திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினுன்கும், வேத சிவாகமங்களின் உண்மைகளை விளக்கி உபகரிக்கும் இதிகாசங்களும் மாபுராணங்களுமாம். இவ்வுண்மையினை மனங்கொள்ளாவிடில் பல விபரீதங்களுக்கும் அபாயங்களுக்கும் இடம் உண்டாகும். தமிழ்—வடமொழிச் சண்டை;பிராமணன்—பிராமணனல்லாதான் என்ற பூசல்; வகுப்புப் போராட்டம் வடவன் திராவிடன் முதலிய அரசியற் பிணக்கு முதலிய உலகநிலைத் துன்பங்களெல்லாம் இவ்வுண்மையினை ஊன்றி உணர்ச்சியில் வைக்கவே ஒழிந்துபோம். வழிவழி என் முன்னோர் அறிவிலிகள், நான் ஒரு முட்டாட் பரம்பரையிற் பிறந்தவன் என்று சொல்லிக் கொள்ள எந்த உண்மைத் தமிழனும் துணியான். சைவப் பிரமாண நூல்களைப் பற்றி நமது சைவத் தெய்வத் திருமுறைகள் பேசுவனவற்றை ஒப்புக்கொள்ளாதவன் சைவனுகான். "அவன் யாரோ? அறியேன்" என்றுதான் சொல்லத் துணிவேன். "வேதத்தைவிட்ட அறமில்லை; வேதத்தில் ஓதத் தகும்அற மெல்லா முள;தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற

வேதத்தையோதியே வீடுபெற்றார்களே" எனவும்.

"அண்ணலருளா யருளுஞ் சிவாகமம்" எனவும்.

"சிந்தைசெய்தாகமம்செப்பலுற்றேனே" எனவும், திருமந்திரத் திருவாக்குக்கள், "சடையார் தாந்தந்த வாகமப் பொருளை, மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ்வகுப்ப" (புரா. 23)என்றதனல் சிவாகமங்களின்பொருளையே திருமூலர் வகுத்துரைத்தனர் என்பதுபெறப்படும். தேவாரத் திருமுறைகள் சிவன் திருவாக்கேயாம் என்பது "எனதுரை தனதுரையா" 'மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருளின்" என்பனவாதி அகச் சான்றுகளால் இனிது விளங்கும். சிவரகசியம், மாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களின் பொருளை எடுத்தாண்ட திருவாக்குக்களால் அவையும் சைவப் பிரமாண நூல்கள் என்பது பெறப்படும்.

"வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற்
பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென
வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத
மீந்தளித்தான்" (தேவா)

'சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கட்
பலதீயன
முனிவன செய்துதந்தானை வென்றவ்
வினைமூட்ட
இனியருணல்கிடென்றண்ணல்செய்தவிர
மேச்சரம்"

"தேவியை வவ்விய தென்னிலங்கைத்
தசமாமுகன்
பூவிய லும்முடி பொன்று வித்தபழி
போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்தவிரா
மேச்சுரம்"

"பாசமுங் கழிக்க கில்லாவரக்கரைப்
படுத்து"

"மெய்சொல்லா விராவணனை
மேலேடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனன்
புள்ளிருக்கு வேளூரே"

முதலிய திருவாக்குக்கள் காண்க.

இனி, வேத உப பிருங்கணங்களாகியவை பதினெண் மாபுராணங்களாம் என்பது "வேதம் முதல்வன் முதலாக விளங்கி வையம், எதப்படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப், பூதம் முதல்வன் முதலே முதலாகப் பொலிந்த, சூதன்னெலி மாலையென்றே கவிக்கோவைசொல்லே" (திருப்பாசுரம்) என்றவிடத்துப் 'பதினெண் புராணங்களென்றே யோதென்றுரைசெய்தார்" (புரா, 841) என்று ஆசிரியர் சேக்கிழார் பெருமான் உரை காட்டியருளிய வாற்றாற் காணப்படும்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# கண்மூடித்தனம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

மாகு நாளென்நாளோ' என்றும் விதந்து கூறி யிருக்கின்றனர்.

சத்காரிய வாதமாவது இல்லாத தொன்று தோன்றுவதுமில்லை, உள்ளது அழிவதுமில்லை என்னும் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தின் முடிவைப் பண்டு தொட்டுக் கூறும் நியாயமாகும். ஆனது பற்றி ஆன்மாக்கள் வீடடையும்போது அவை இறைவனின் திருவடியை அடைகின்றன என்பது சித்தாந்தக்கொள்கை; சொரூப நிலையாவது பெயர், குணம், உருவம் ஒன்றுமில்லாத இறைவனின் சச்சிதானந்த சொரூப நிலையாகும். தடத்த நிலையாவது பெயர், உருவம், குணம் முதலியனவற்றை இறைவன் எமக்காக ஏற்றுநிற்கும்நிலையாகும் இப்பெற்றினையே

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணரா
த் திருவடியை
உருநாமம் அறியவோர் அந்தணனாய்
ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமிலாற்
காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங்
கொட்டாமோ"

என்று எமது மணிவாசகப்பெருமான் கூறுகின்றார். இனி அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அரிய குறட்பாக்ளால் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், சுருக்கமாக

"ஈதல்அறம், தீவினை விட்டீட்டல்
பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு
பட்டதே இன்பம் பரனை நினைந்து
இம்மூன்றும்
விட்டதே பேரின்பவீடு"

என்று ஔவைப்பிராட்டியாரும் கூறியிருக்கின்றனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பர். இவற்றை எமக்கு உணர்த்துவதற்கு முறையே திருநாவுக்கரசுசுவாமிகள், திருஞானசம்பந்தசுவாமிகள், சுந்தரமூர்த்திநாயனுர், மணிவாசகப்பெருமான் தோன்றி அவ்வந்நெறியில் நின்று ஒழுகி வீடுபேறெய்தினர்; இவ்வரிய பெரிய விஷயங்களைத் தழுவி அறிஞர்கள் பலர் இங்கு விரிவுரை நிகழ்த்துவார்கள்.

எங்கள் சமயம் பல வேறு சமயங்களையும் ஆன்ம பரிபக்குவத்திற்கேற்ற பலபடிகளாகக் கருதுகின்றது. விஞ்ஞானிகளுக்கும் தத்துவ ஞானிகளுக்கும் வேண்டும் அருமையான அறிவுப் புதையல்களைச் சைவசமயம் கொடுக்கின்றது. இப்பேர்ப்பட்ட அரும்பெரும் சமயத்திற்பிறந்தவர் நாம், ஆனல் எமது சமய நிலை என்னே! மெய்யன்பர்களே! சற்று யோசியுங்கள் நாம் உண்மையான சமய வாழ்க்கை வாழ்கின்றிலோம்; எமது கோயிற் சொத்துக்களை உலக விஷயங்களிற் கூசாமற்செலவு செய்கின்றோம். எம்மவருட் பலர் பிறமதம் புகுகின்றார்கள் அண்மையில் இந்தியாவிலே சேலம் ஜில்லாவில் ஐந்து ஆறு கிராமத்தவர் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர் என அறிந்து மனம் வருந்துகின்றோம். இதேபோல் எமது நாட்டில் சில காலத்திற்குமுன் நெடுந்தீவிலும் அச்சுவேலியிலும் மதமாற்றம் செய்யப்பட்டதாக அறிந்தோம். நாம் கண் மூடியிருந்து பழங்கதை பேசுவதில் ஓர் மகிமையுமில்லை. சைவசமயத்தின் பெருமையையும் இனிமையையும் தெரியாத எமது சகோதர சகோதரிகளுக்கு நாம் அவற்றைச் சிறந்த முறையில் அன்போடு அறிவுறுத்த வேண்டும். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றுபேச்சளவிற் சொல்லியமையாது செய்கையிலும் காட்டவேண்டும். காலதேச வர்த்தமானத்தை அறிந்து அவற்றிற்கேற்சச் சிவநெறியில் நாம் நிற்கவேண்டும். எமது தாயுமானப் பெருந்தகையாரும்:

"காலமொடு தேசவர்த்த மானமாதி
கலந்துநின்ற நிலைவாழி, கருணைவாழி"

என்று இறைவனை நோக்கிப் பாடினாலல்லவா?

எமது சைவத்தை வளர்க்கும் தொண்டில் முக்கியமானபாகம் எங்கள தாய்மார்களைச் சார்ந்தது. அன்று திலகவதியார், மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார் தோன்றியிராவிட்டால் எமது சமயம் சிறப்புற்றிருக்குமா? எமது சமய ஞானதீபம் எங்கள் தாய்மார்கள் கையில் இருக்கின்றது. ஆகையால் தாய்மார்கள் யாவரையும் உண்மைச் சமய வாழ்க்கை வாழ்ந்து உலகத்தை நலனுறச் செய்யவேண்டுமென வேண்டி அவர்களையும் இங்கு இனிது வரவேற்கின்றோம்.

## COMMISSION SALE

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

1. வல்வெட்டித்துறை தம்பிப்பிள்ளை இராசாவும், 2. பெண் அன்னம்மாவும், வழக்காளிகள்


இல 2618—P

1. வல்வெட்டித்துறை வடிவேலு வேலுப்பிள்ளை, 2. பெண் பாறுபதிப்பிள்ளை, 3. ஆறுமுகம் செல்லத்துரை, 4. பெண் தங்கரட்டினம், 5. பொன்னுச்சாமி சோமசுந்தரம் 6. பெண் சிவகாயிப்பிள்ளை, 7. சின்னததம்பி தங்கேஸ்வரராசா, 8 ச. வே. சின்னத்தம்பி, 9. தற்காலம் கொழும்பு C. T. O-ல் இருக்கும் செந்திப்பெருமாள் வேலுப்பிள்ளை, 10 வல்வெட்டித்துறை: T. நடராசா கைம்பெண் சிவக்கொழுந்து, 11. சின்னையா செல்லத்துரை, 12 சோமசுந்தரம் சோதிலிங்கம், 13. சோமசுந்தரம் சுந்தரலிங்கம், 14. பெண் சிவபாக்கியம், 15. பருத்தித்துறை நடராசா கைம்பெண் யோகாம்பிகை அம்மாள், 16 வல்வெட்டித்துறை வல்லிபுரம் கைம்பெண் சின்னம்மா, 17. சுந்தரம் துரைசாமி, 18. பெண் தங்கப்பாக்கியம், 19. வாரித்தம்பி கந்தசாமி 20. A. நாகலிங்கம் வேலாயுதம், 21. கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம், 22. தம்பையா கைம்பெண் ஆச்சிமுத்து.

எதிரிகள்.

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிசன் அதிகாரப்படியும் 1947-ம் ஆ வைகாசிமீ 12ந் திகதி திங்கட்கிழமைபிற்பகல் 2 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 6 கண்டங்களாகப் பிரிவிடப்பட்டு அவ்வாதனத்தில் நின்று ஒவ்வொரு கண்டத்தின் மதிப்புத்தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

வடக்கு




தெற்கு

ஆதன விபரம்

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டித்துறை கந்தர் காடு நிலப்பரப்பு 14 இதற்கு ஊடாகச் செல்லும் ரோட்டுக்கு எடுக்கப்பட்ட நிலம் நீக்கி மிகுதி நிலப்பரப்பு 9 குளி 14 32/18 இவை உலாந்தாமேஸதர் வே. சிவரத்தினம் அவர்களால் 1946-ம் ஆண்டு வைகாசி மாதம 11ம் திகதி 275-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு இவ்வழக்கில் Z என்னும் அடையாளத்துடன் இணைக்கப்பட்ட படத்தில் 1ம் 3ம் 4ம் துண்டுகளாய் காட்டப்பட்டதுமாகிய ஆதனம்: இதற்குள் அடங்கிய தகரக் கொட்டில்களும் பயிர்களும் உட்பட எல்லை கிழக்கு தியாகராசா பெண் வேதநாயகியுடைய உருமைக்காரருக்குரிய ஆதனமும் ரோட்டும், வடச்கு தெரு. மேற்கு சின்னத்தம்பி அப்பாத்துரைக்குடைய ஆதனமும் ரோட்டும் கை ஒழுங்கையும், தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமி அம்மாளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மதிப்பு ரூபா 11197-42.

(1) 1ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி 6 32/3 மதிப்பு ரூபா 1938-33. எல்லை கிழக்கு ரோட் வடக்கு தெரு. மேற்கு 2ம் நம்பர் கண்டம். தெற்கு ரோட்.

(2) 2ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி 1 32/14 மதிப்பு ரூபா 1151-21. எல்லை கிழக்கு 1ம் நம்பா கண்டம். வடக்கு தெரு. மேற்கு சின்னத்தம்பி அப்பாத்துரையுடைய ஆதனம். தெற்கு ரோட்.

(3) 3ம் கண்டம் குளி 3 32/16 மதிப்பு ரூபா 191-44 எல்லை கிழக்கு 4ம் நம்பர் கண்டம். வடக்கு ரோட். மேற்கு ஒழுங்கை. தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமியம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(4) 4ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி 12 மதிப்பு ரூபா 1958 67. எல்லைகிழக்கு 5ம் நம்பர்க் கண்டம், வடக்கு ரோட். மேற்கு 3ம் நம்பர் கண்டம். தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமியம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(5 5ம் கண்டம் நிலப்பரப்பு 2 குளி 10 32/10 மதிப்பு ரூபா 3217-92 எல்லை கிழக்கு 6ம் நம்பர் கண்டம். வடக்கு ரோட் மேற்கு 4ம் நம்பர் கண்டம் தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமி அம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

(6) 6ம் கண்டம் நிலப்பரப்பு 3, குளி 16/3 மதிப்பு ரூபா 2736-85. எல்லை கிழக்கு தியாகராசா பெண் வேதநாயகியின் உரிமைக்காரருக்குடைய ஆதனம். வடக்கு ரோட். மேற்கு 5ம் நம்பர் கண்டம். தெற்கு சின்னத்துரை பெண் அன்னலட்சுமி அம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

வி. முதலியார் குழந்தைவேலு,
பருத்தித்துறை, கொம்மிஷனர்.
31—3—47.
Mis 8 22—4—47.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க - ருஷிய பிணக்கு

2-ம் பக்கத் தொடர்ச்சி

வருகிறபோதிலும், அச்சுதந்திர இயக்கம் இன்னும் கொழுந்துவிட்டெரிகிறது.

O

**அமெரிக்காவின் சமதர்ம எதிர்ப்பு**

கிழக்கு ஐரோப்பாவிலே சமதர்ம இயக்கம் வெகுவாகப் பரவி வருகிறது. நிலைமை இப்படியே இன்னும் இருக்குமானால் உலகம் முழுவதையுமே சமதர்ம இயக்கம் விழுங்கிவிடும் என்ற பயம் இன்று அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கிறது. உலகிற் சமதர்ம இயக்கம் பரவாமலிருப்பதற்கு என்னென்ன விதமான நடவடிக்கைகளைக் கையாளலாம் என்று ஜனதிபதி ட்ரூமன் இன்று ஆலோசித்து வருகிறார். இன்று வறுமைப்பிணியில் தவித்து, சமதர்ம ருஷியாவின் வலையிற் சிக்கும் நாடுகளை ருஷியாவின் பிடியிலிருந்து நீக்கவேண்டுமானால், அவற்றுக்குப் பண உதவியும் பொருள் உதவியும் செய்யவேண்டும் என்றும் மிஸ்டர் ட்ரூமன் கருதுகிறார். அப்படியான நாடுகளுக்கு அமெரிக்கா உதவி செய்ய—துருக்கி, கிறீஸ் நாடுகளுக்குச் செய்ததைப்போல—முயற்சி எடுக்கப்படும் என்று தெரிகிறது.

**சீனத்தில்** O

சீனத்தில் இதுகாறும் சர்வாதிகாரம் புரிந்து வந்த குவாமிங்தாங் கட்சிக்குப் பதிலாக சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவச் சேனதிபதி சியாங்கேஷெயிக் தீர்மானித்து அதன்படி தம் அரசாங்கத்தை மாற்றியமைத்துவிட்டார். ஆனால், இன்று சீனவின் உள்நாட்டுக் கலகத்துக்குக் காரணராகவுள்ள சமதர்மிகள், இந்த கூட்டு அரசாங்கத்திற் பங்குபற்றவில்லை. கூட்டு அரசாங்கத்தை அமைத்துவிட்டபோதிலும், குவாமிங்தாங்கட்சியே அந்த அரசாங்கத்தில் அதிக அதிகாரமும் செல்வாக்கும் படைத்திருக்கிறது. ஆகவே இக்கூட்டு அரசாங்கத்தினால் சாஸ்வதமான பயன்கிடைக்குமோ என்று அரசியல்வாதிகள் சந்தேகம் கொள்ளுகின்றனர்.

---

## பிற ய செய்தி

**சமரசம் இல்லை?**

இதுகாறும் இராஜப்பிரதிநிதி நடத்திவந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக காங்கிரஸ், முஸ்லிம் லீக் என்னும் இரு கட்சிகளுக்குமிடையே சமரசம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, இனியும் இதப் பலன் கிடைக்காக் கைங்கரியத்தற் பிரவேசிப்பதிற் பயனில்லை என்ற ஓர் நிலைக்கு இராஜப்பிரதிநிதி வந்துவிட்டதாக லண்டன் ஒப்சேர்வர் பத்திரிகையின் டெல்கி நிருபர் தெரிவிக்கின்றார். பாகிஸ்தான் கிடைக்காவிட்டால் இந்தியாவிலே முன் ஒருபோதுமில்லாதவாறு இரத்தவாறு பெருகும் என்று ஜின்னா இராஜப்பிரதிநிதிக்குக் கூறிவிட்டதாகவும், இந்தியாவைப் பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்று இரு கண்டங்களாகப் பிரிக்க அவர் தீர்மானித்துவிட்டார் என்றும் தெரிகிறது. பாகிஸ்தான் அமைக்கப்படுமானால் பஞ்சாலத்தில் கிழக்குப் பக்கமும் வங்காளத்தில் மேற்குப் பக்கமும் அதிற் சேர்க்கப்படமாட்டாது. வங்காளத்தில் கல்கத்தா மேற்கு வங்காளத்துடன் சேர்க்கப்பட்டுவிடும். இப்படியான ஒழுங்கு, பாகிஸ்தானைத் தலையில்லா முண்டமபோலாக்கினலும் அதில் ஜின்னா திருப்திப்படுவராம். எது எப்படியிருந்தபோதிலும், அடுத்த ஜூன் மாதத்துக்கிடையில் தாம் கடைசியாக என்ன செய்யப்போகிறது என்பதுபற்றி மவுன்ற் பேற்றன் பிரபுவும் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஓர் அறிக்கை விடலாம்.

# சைவ சமயம்

அகில இலங்கை சைவ மகாநாடு தலைமை யுரை
C K சுப்பிரமணியமுதலியார்

4-ம் பக்கத் தொடர்ச்சி

(ரு)

**சைவர் மேற்கொள்ளும் ஒழுக்கம்**

முன் கூறியவாறு சைவப் பிரமாண நூல்களால் ஒரு தலைவர் உண்டு. உயிர்கள் உண்டு. இரண்டுவகையும் அறிவுடையோராயினும் தலைவர் என்ற கடவுள் முற்றறிவுடையர். அறிவிக்காமலே அறிபவர் உயிர்கள் சிற்றறிவுடையோர்: அறிவித்தாலறியும் இயல்புடையவை; ஆனால் விரிந்த அறிவுபெறும் இயல்புடையவை; அவ்வாறு பெறக்கூடிய அவற்றின் அறிவைச் சுருக்கிவைத்திருப்பது அவைகளைக் கட்டிநிற்பதாகிய இருள் வடிவமான ஆணவமலம். அது மிகக் கொடியது. அதன் வலிமையை நீக்கிப் பேறறிவைப் பெறுவதே உயிர்களின் நோக்கமாயிருத்தல் வேண்டும். அதனைப் பெறுவதே மலக்கட்டினின்றும் வீடு எனப்பெறும். இதனை அவை தாமாகச் செய்துகொள்ளும் வலிமையில. அதற்குக் குருவருளும் திருநீறும் கண்டிகையும் ஸ்ரீபஞ்சாக்ஷரமுமாகிய சாதனங்கள் இன்றியமையாதன. இவற்றைக் கைக்கொண்டு சரியை முதலிய நெறிகளில் நின்றால் பாச விடுதி பெற்றுத் தலைவரை அடைந்து உயிர் துன்பங் கலவாத இன்பத்தில் இடையறாது நின்று முதல்வனது ஆனந்தத்தில்மூழ்கி மீளாதுநிற்கும் என்ற இன்னோரன்ன உண்மைகளை நாம் காணலாம். கண்டபோது இதற்கு மாறாகிய நிலைகளும் சமய நிலைகளும் வெறும் பொய்யென்றும் வீண் என்றும் நன்கு விளங்கும். விளங்கவே அவற்றைவிட்டுச் சைவநூல்விதித்த நெறியொழுக்கத்தில் ஊன்றி நின்று பயன்பெறுவோம்.

'மாசில தமணித்திகழ் மேனிமேற் பூசநீறுபோ லுள்ளும் புனிதர்கள்'' (புரா) என்றபடி உள்ளும் புறம்பும் தூய வாழ்க்கை வாழ்வோம். திருநீறு எப்போதும் எங்கள் நெற்றியினையும் மேனியினையும் அணிசெய்யும் விலையில்லாத திருநீற்றினை விட்டு விலை கொடுத்து வினையை வாங்குவதுபோலப் பற்பல வாசனைப் பண்டங்கள் இப்போது விருப்பாயிருப்பன அப்போது வெறுப்பாய்விடும். "பூசின மாசாம்'' (பட்டினத்தார்) அக்கமணி இடைவிடாது மங்கலப் பெண்களுக்குத் தாலிபோல எங்கள் கழுத்தில் தங்கும்; கடிகாரம், பணச்சிறுபை, பொடிக்கூடு, மைப்பேனா முதலிய பாசப் பண்டங்களை விடாது தாங்கிச் சுமந்து திரிகின்ற நாம், திருநீற்றுப் பை ஒன்றினையும் அவற்றுடனே எப்போதும் தாங்கிச் செல்வோம். வெற்றுரையாடியும், விளையாடியும் காலம் போக்கேம் சிவன் புகழையும் அடியார்புகழையும் உன்னியுன்னிப் பன்னிப்பன்னிப் பேசுவது எங்களுக்கு விருப்பந் தரும் நாளும் சிவன்கோயில்சூழ்தலால் எமது உடலும கால்களும் உரம்பெறும் சிவன் கோயிலில் விளக்கிடுதல் — திருமுற்றம் தூய்மை செய்தல், பூமாலை தொடுத்தல், சிவனுக்காகப் பூ, மரஞ் செடிகொடிகளை வைத்து வளர்ப்போம். சிவனடியார்களைக் கண்டபோது அவர்களை எமது உற்றாரிலும் பெரிது பேணி அகமகிழ்ந்துபசரிப்போம். ''மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந் திறத்துச் சேர்வை, யறப்பித்துப் பத்தரினத்தாய்'' (என்பது ஞானநூல்.) சிவன் அடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபடுவோம். இவையல்லாத உலக வாழ்க்கைத் தொடர்ச்சிகள் யாவும் எமக்கு வீணானவை என்ற உணர்ச்சியுண்டாகும் உலகியற்போர், அரசியற் போர் முதலிய போராட்டங்களில் எங்கள் விருப்பம் செல்லா.

இவ்வாறு உள்ள நிலைகள் வந்து நிலைபெறும்படி மேற்கொண்டு ஒழுகுவோமாகில் முன்கூறிய சைவ ஒழுக்கம் கைவரப்பெற்று நம் சிவானந்தம் பெருகச் சிவனுக்காளாகி, மீளா நெறியல் வாழ்வுபெறுதல ஒருதலை.

---

## நேருவுக்குத் தந்தி

சென்னை மாகாணத்தில்சிறையாகியுள்ள டக்ரர் கோல்வின் R. டி. சில்வாவை உடனே விடுதலை செய்வதற்குப் பண்டிதர் நேரு முயற்சி செய்ய வேண்டும் என்று இலங்கை கிளறிக்கல் உத்தியோகத்தர் சங்கம் பண்டிதர் நேருவுக்கு ஓர் தந்திச் செய்தி அனுப்பியிருக்கிறது.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## சரவணப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பொருள் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மெல்லை
முந்து போலவோ னுருகிப் கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவு மொன்றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்

எல்லா உயிர்களும் ஒடுக்கமடையும் மகாசங்கார காலத்திலே, எம்பெருமானுடைய ஐந்து) சத்திகளும், முன்னர்த் தோற்றியவாறே (பின்னரும்) ஒன்றாய் ஒடுங்கும் முறைபோல, ஆதி நடு ஈறு அற்ற ஒப்பற்ற ஆறு திருவுருக்களும் ஒன்றாய்ச் சேர்ந்தமையின், கந்தன் என்னும் திருநாமத்தைப் பெற்றார் உமாதேவியாருடைய இளைய திருக்குமாரராகிய முருகமூர்த்தி யென்பது கருத்து.

வசனாய் நின்ற இறைவனிடத்துப் பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் பஞ்ச சத்திகளும் சிருட்டி ஆரம்ப காலத்திலே தோன்றித் தத்தமக்கு விதிக்கப்பட்ட கருமங்களை இறைவனருள் வழி ஆற்றிப் பின்னர்ச் சர்வ சங்கார காலத்தில் அந்த இறைவனிடத்திற்றானே தோற்றியவாறு ஒடுங்குதல் போல. ஏகவடிவு கொண்டெழுந்தருளிச் சரவண வாவியிலுள்ள சிறந்த செந்தாமரைப் போதில் எழுந்தருளிய சண்முக மூர்த்தி தம்மைப் போற்றவந்த கார்த்திகைப் பெண்கட்கு அருள்செய்யும்படி ஆறு திருவடிவங் கொண்டு அப்பெண்கள் மகிழ்வுறும் வண்ணஞ் சில திருவிளையாடல்களையும் செய்து, இப்பொழுது உலகமாதாவாக வந்து தமது அருமைத் திருக்கரங்களால் அணைத்தெடுத்தவுடனே அறுமுகங் கொண்ட ஒரு சேயாய் விளங்கினரென்றபடி; முருகமூர்த்திக்குரியன வெனச் சொல்லப்படும் அறு திருவடிவமும் ஒரு திருவடிவமும் காலாதீதமானவை யென்பார் "அந்தமில்லதோர் மூவிருவடிவு மொன்றாகி'' யென்றார்; கவுரிதன்குமரன் முருகவேளுக்குரிய ஆயிர நாமங்களுளொன்று ஈசுவரி புத்திரன் என்றவாறு. கந்தன்—சேர்க்கப்பட்டவன், ஒன்றாக்கப்பட்டவன்;

[கந்தனென்பதற்கு மாற்றாருடைய படையை யுடைப்பவனென்னலுமாம்] (21)

முன்பு புல்விய குமரவேள் முடிதொறு மூயிர்த்து
மின்பி றங்கிய புறந்தனை நீவலும் விமலை
தன்பெ ருந்தனஞ் சுரந்துபால் சொரிந்தன தலையாம்
அன்பெ னப்படு கின்றதித் தன்மையே யன்றோ.

முன்னர்த் தழுவி யொன்றாகச் செய்த குமாரக்கடவுளின் உச்சிதோறும் முத்தமிட்டு ஒளிபொருந்திய முதுகினைத் தடவுதலும், மலரகிதையாகிய இறைவியின் பரஞானம் அபரஞான மெனப்படும் தனங்களிரண்டும் தாமே ஞானமாகிய அமிர்தத்தைச் சுரந்து உகுத்தன; தலையாய அன்பென்று சொல்லப்படுவது இந்நிகழ்ச்சியையேயாகும் என்பது கருத்து.

தம் இளைய சேயென்ற தொடர்பினால் இறைவி உச்சிமோந்து சிறுபுறந் தைவந்து கருணை பாராட்ட, அவ்விறைவியின் தூய தனங்களானவை ஞானமாகிய அமிர்தத்தைத் தாமே சுரந்து உகுத்தன என்றபடி: சின்னாட் பல்பிணிச்சிற்றறிவினராகிய மானுடர்விஷயத்தில்நிகழ்வதுபோலத் தாயென்றுஞ் சேயென்றும் பாலூட்டுதலென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதே, இறைவியும் இப்படி மானுடத்தாயை நிகர்ப்பவளா என்ற அறியாமையின் பாற்பட்டார் சந்தேகமுறுவண்ணமும், இச் செயல்களெல்லாம் இறைவியும் இளஞ்சேயும் ஆன்மாக்கள் ஈடேறும்படி நாடகமாத்திரையாகச் செய்யும் அருட்செயலாகு மென்பதைத் தெருட்டும் வண்ணமும், ஆசாரியசுவாமிகள் இறைவிக்குரிய வனைய நாமங்களு ளொன்றை இங்கே யெடுத்தாளாது விமலையென்ற நாமத்தை யெடுத்தாண்டனரெனக. விமலை-இயல்பாக மலத்தினின்றும் நீங்கியவள், ஆன்மாக்களின் மலத்தைப் போக்குபவள் என்னும் பொருள்களைக் கொண்ட மொழியாகும்.

கனத்தாள் வெங்கய முகனும் கந்தனும் சம்பந்தனும் பாலுண்டதோடு அமையாது, பராசர முனிவன் சேயினர் அறுவர் சரவணப்பொய்கையில் இப்பாலுடன் கலந்தநீரை யுண்டமையினால், அம்முனிவர் அவர்களுக்கிட்ட சாபத்தை நீக்கி அவர்களிடத்தில் ஞானத்தை ஆக்கியதோடு அமையாது, உலகத்தினகண்ணேயுள்ள ஆன்மகோடிகளனைத்தினுக்கும் ஞானப்பாலூட்டு மியல்புடைய தனங்களாதலின் "பெருந்தனம்'' என்றார். தாய் தன் சேயிடத்திற் பாராட்டும் அன்பிலே சிறந்த அன்பு இதுவாதலின் "தலையா மன்பெனப்படுகின்றதித்தன்மையே யன்றோ'' என விதந்து கூறப்பட்டது. இனி, யுத்தகாண்டத்திலே தன் தலைவனாகிய சூரபன்மன் மாண்டானெனக் கேட்ட மாத்திரத்தே அவன் தேவியானவள் ஆவி நீங்கினள் என்னுங் கருத்தமைந்த "காவன்மன்னவன் இறந்தனனெனுமுரை கன்னத்துண் மேவுமெல்லையில் அசனியேறுண்ட வெம்பணியேபோல், தேவியாகிய பதுமகோமளையெனுந் திருமங்கை, ஆவிநீங்கினள் தலையளியாத திதுவன்றோ'' என்பதிலே சொல்லப்பட்ட தலையளி நாயகனிடத்து மனைவி கொண்ட உத்தம பத்தியெனக. (22)

---

### நீர்வேலியில் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை

ஸ்ரீவிநாயகர் வாசிகசாலையில் நீர்வேலி சைவ இளைஞர் சங்கத்தால் 1947 ம் ஆண்டு சித்திரை மாதம் 4ம் திகதி 17-4-47) வியாழக்கிழமை 6 மணியளவில், சுவாமிகளின் குருபூசை தேவார பாராயணத்துடன் மிகவும் விமரிசையாக நடத்தப்பெற்றது அதன் பின் பண்டிதர் திரு. செ. துரைசிங்கம், அவர்களால் சுவாமிகளின் வாழ்க்கையும், அவர் அருளிச்செய்த தேவாரத்தின் மகிமையும், பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. ஈற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறிற்று.

### அப்பர்சுவாமிகளின் குருபூசை விழாவும் திருப்புகழ்ப் பஜனையும்

19.4-47 சனிக்கிழமை பிற்பகல் 4. 30 மணியளவில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க ஆதரவின்கீழ் மேற்படி விழா கொண்டாடப்பட்டது. அத்தருணம ஸ்ரீமுருகதாஸ் சுவாமிகள் அப்பர் சுவாமிகளின தத்துவம் பற்றி எடுத்துரைத்ததோடு இனியதோர் திருப்புகழ்ப்பஜனையும் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

செவ்வாய் ஏப்ரல் 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் விச்வநாதஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 என் வீ வசந்தகோ[illegible] இசைத்தட்டு 8-30 டி கே பக்கிரிச[illegible]ளை புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2 45 முடிவு.

மாலை 5 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 இயற்கைக் காட்சிகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 முடிகொண்டான் வி வெங்கடராமையர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 நாதமுனி பான்ட் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஜே எம் அப்துல்கனி வீதார் 10 நீங்கள் கேட்டவை 10–30 முடிவு.

புதன் ஏப்ரல் 23

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7–30 சீதாமணி ஸ்ரீனிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 சிதம்பரம் எஸ் செல்வரத்தினம்பிள்ளை பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சிதம்பரம் எஸ் செல்வரத்தினம்பிள்ளை பாட்டு 2-15 கோடைக்கல்வி 2.45 முடிவு.

மாலை 5 சீதாமணி ஸ்ரீனிவாசன்பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7–15 புதிய வெளியீடுகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 கன்னி நாட 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஆங்கிலச் செய்தி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு,

வியாழன் ஏப்ரல் 24

7.15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 ஏ விநாயகமுதலியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வயலின் இசை 8-30 கமலாராமன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ விநாயக முதலியார் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2 45 முடிவு.

மாலை 5 கே சுப்பிரமணியம் வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 குரல்வகை 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 கும்பகோணம் பானுமதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 தந்தையின் உள்ளம் சிறுகதை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 கே சுப்பிரமணியம் வீணை 10-30 முடிவு.

வெள்ளி ஏப்ரல் 25

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 ஜயலட்சுமி ராஜகோபாலன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 ஏ வி நடராஜன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜயலட்சுமி ராஜகோபாலன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஜயலட்சுமி ராஜகோபாலன் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 டி எஸ் ஷண்முகசுந்தரம் பிள்ளை பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 தென் இந்தியத் தொழிலாளி 8 திருவெண்காடு பி சுப்பிரமணிய பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி வி கிருஷ்ணமூர்த்தி குரலிசை 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## அழுகிறார்!

இங்கிலாந்து நாசமாகப்போகிறது. நாசவழிக்கே அதனை இன்று தொழிற்கட்சி அரசாங்கம் கொண்டு செல்லுகின்றது. ஆதித்தன் மறையாத சக்கராதிபத்தியம் தேய்ந்து போகிறது. இந்திய மகுடம் வெட்கமற்ற முறையில் துறக்கப்படுகிறது" என்று இவ்வாறு யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த மிஸ்ரர் வின்ஸ்ரன் சேர்ச்சில் சென்ற வாரம் லண்டனில் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறிக் கண்ணீர் வடித்தார்!.

## கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை

கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையின் 21-ம் வருட நிறைவுவிழா 29-3-47-ல் போப்ஸ் வீதி 1 7 ம் இலக்க இல்லத்தில் உபசபைத் தலைவர் மூ. சு. திருவிளங்கம் அவர்களின் தலைமையின்கீழ் நிறைவேறியது.

1946-ம் ஆண்டு அறிக்கைப்பத்திரமும் வரவுசெலவுக் கணக்கும் சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டதும் 1947-ம் ஆண்டுக்கு உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நாரந்தனை இளைஞர் சங்கம்

ஷை சங்கத்தின் இரண்டாம் வருடாந்தவிழா, ஊர்காவற்றுறையைச் சார்ந்த நாரந்தனை கணேசவித்தியாசாலை மண்டபத்தில் திரு. த. தில்லைநாதர் அவர்களது தலைமையில் 9-4 47 ல் நடைபெற்றது. வேலணையூர் பண்டிதர் அ. பொன்னுத்துரை, திரு. வ கந்தையா, திரு. இ. பொன்னையா, திரு. நா. கந்தையா ஆதியோர் திறந்த பிரசாரணங்கள் செய்தனர். —கடித

## வைக்கோல் ஏலவிற்பனவு

கிளிநொச்சி பத்தாம் வாய்க்கால் புதிய அரசினர் சேனைக் கமத்தி லிருக்கும் 1946—47-ம் ஆண்டு காலபோக வைக்கோல் குவியல்கள் ஒவ்வொன்றையும் 1947-ம் ஆண்டு சித்திரை மாதம் முப்பதாம் (30) தேதி பின்னேரம் நாலுமணி அளவில் யாழ்ப்பாணம் உதவி ஏசண்டரவர்களால் ஏலவிற்பனவு செய்யப்படும். வைக்கோல் வாங்குமிடத்தில் பணம் கொடுக்கப்படவேண்டும்.

இரு கிழமைக்குள் வாங்கின வைக்கோல் முழுவதையும் அவ்விடத்திலிருந்து அகற்றிவிடவேண்டும்;

மறு விபரங்களைப் புதிய சேனைக் கமயனேச்சரிடம் பெற்றுக்கொள்ளலாம்,

ம. ஸ்ரீ கந்தா
வடமாகாண உதவி ஏஜண்டர்

G 14 22.4.47

## துன்னாலை வடக்கு வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு:

கனம் ஐயா,

தங்கள் சாதனம் 25.3-47 பிரசுரத்தில் குறித்த வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோயில் சம்பந்தமான விளம்பரமொன்று காணப்பட்டது. அவ் விளம்பரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஒன்றேனும் யதார்த்தத்தில் நிகழவேயில்லை. குறித்த விளம்பரப்படி குறித்த கோயிலில் குறித்த திகதியில் எவ்வித கூட்டமும் நடைபெறவில்லை. எவ்விதமான கூட்டத்தைப் பற்றிய அறிவித்தல் ஏதும் குறிப்பிட்ட காலத்தில் குறித்த கோயிலைச் சேர்ந்த மகாசனங்களுக்குக் கொடுபடவில்லை. மேற்படி ஆலயபரிபாலன அதிகாரத்தை அபகரிக்கும் நோக்கமாய்க் குறிப்பிட்ட ஒரு சிலரின் சூழ்ச்சியாலேயே அவ்விளம்பரம் தங்கள் பத்திரிகையில் வெளியாயிற்று. குறித்த கோவிற் பரிபாலன விஷயமாக இவர்கள் ஏதாவது சாதனம் நிறைவேற்றினால், குறித்த இக்கோயிலைச் சேர்ந்த மகாசனங்களாகிய நாங்கள் அங்கீகரிக்க மாட்டோமென்றும் இதனால் வெளிப்படுத்துகின்றோம்.

இங்ஙனம்

ஷை கோயில் மகாசனங்களின் சார்பாக

1 சி. க. சின்னத்தம்பி — துன்னாலை
2 சு. சிதம்பரப்பிள்ளை — துன்னாலை
3 ஆ. சிதம்பரப்பிள்ளை — துன்னாலை
4 K. Chelliah — Karaveddy
5 சி. சிவசம்பு

M 13 22—25 4.47


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நீ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Std 9 1-11—30-4 (செ)

# இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Tuesday, April, 22 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org